# வடக்கில் பரவலாக தாலிக்கொடி திருட்டுகள்!

விலை சதம் 25 ★ ★

# ஈழநாடு

மலர் 16 The Eelanaadu இதழ் 162

வியாழக்கிழமை ஆடி 9 றஜப் 5 வியாழக்கிழமை 25-7-74

# கச்சதீவில் அரசு ஆட்சி உரிமை

## தகவல் அமைச்சு செயலாளர் விஜயம்

(நமது நிருபர் நவரத்தினு)

கச்சதீவு, வியா.

கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்பு நேற்று முதல் தடவையாக உறுதிப்படுத்தும் வகையில் ஒரு வைபவம் இடம் பெற்றது.

இந்த வைபவத்தில் தகவல் ஒலிபரப்பு அமைச்சுச் செயலாளர் திரு. பிட்ஜ்வே திலகரத்ன உத்தியோகபூர்வமாகக் கலந்துகொண்டார்.

இவருடன் சில அமைச்சு உத்தியோகத்தர்களும் வந்திருந்தனர்.

இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி கச்சதீவை இலங்கைக்குச் சொந்தமாக்கிய பின்னர், கச்சதீவுக்கு உத்தியோகபூர்வமாக வந்த முதல் உத்தியோகத்தர் திரு. திலகரத்தினு வேயாகும். வைபவத்தின் பின் இவர் கொழும்பு திரும்பினர்.

## துப்பறிய பொலிஸ் நாய் வந்தது!

யாழ்ப்பாணம் வியா

வடபகுதியில் பட்டப்பகலில் வீடுகளில், தாலிக்கொடி திருட்டுகள் நடைபெற்றுவருவதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், புத்தூர், கொடிகாமம் பகுதிகளில் பட்டப்பகலில் தாலிக்கொடி திருட்டு நடைபெற்றுள்ளது. புத்தூரில் நடைபெற்ற திருட்டை கண்டுபிடிக்க, அனுராதபுரத்திலிருந்து துப்பறியும் நாய்கள் கொண்டுவரப் பட்டுள்ளன. கைரேகை அடையாள நிபுணரும் வந்துள்ளார்.

### புத்தூரில்

புத்தூர் கிழக்கில் சித்தி என்பவரின் வீட்டில், பன்னிரண்டு பவுண் நிறையுள்ள தாலிக்கொடியும், சுமார் பதினேயாயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியும் பட்டப்பகலில் திருடப்பட்டுள்ளது.

அவ்வீட்டில் ரொக்கம் ஏழாயிரம் ரூபாவும் திருடப்பட்டுள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பெரேரா கான்ஸ்டபிள் மாணிக்கவாசகா ஆகியோர் சந்தேகத்தின் பேரில், புத்தூரைச் சேர்ந்த எஸ். செல்வராசா என்ற வாலிபரையும், மற்றும் இரு சிறுவர்களையும் கைதுசெய்துள்ளனர்.

இத்திருட்டு தொடர்பாக தொடர்ந்து பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர். (ஆ-தி)

யாழ்ப்பாணம் கோவில்வீதியிலுள்ள டாக்டர் ஜோசப் வீட்டில் திருடப்பட்ட பதினாயிரம் ரூபா பெறுமதியான 21 பவுண் நிறையுள்ள தாலிக்கொடியை யாழ்ப்பாணம் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

தாலிக்கொடியுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரான நாகலிங்கம் ரவீந்திரன் என்ற வாலிபர் இன்று காலை யாழ்ப்பாணம் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

டாக்டர் வீட்டிலுள்ள கும்கேஸிலிருந்து இந்த தாலிக்கொடி திருடப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

நீதவான் அடுத்தமாதம் 9-ம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார். (ஆ-தி)

கொடிகாமத்திலுள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டொன்றில் சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி பட்டப்பகலில் திருடப்பட்டுள்ளது.

பாடசாலையிலிருந்து வந்த ஆசிரியை, தாலிக்கொடியை மேசையில் வைத்துவிட்டு கிணற்றடிக்குச் சென்றபோதே இத்திருட்டு நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

தாலிக்கொடியுடன், காப்பும், கைக்கடிகாரமும் திருடப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை சந்தேகநபர் எவரும் கைது செய்யப்படவில்லையென சாவகச்சேரி பொலிசார் தெரிவித்தனர்.

## பிரதமர் பாக். செல்கிறார்

கொழும்பு, புதன்

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா செப்டம்பரில் பாகிஸ்தான் செல்கிறார்.

பாகிஸ்தான் பிரதமர் ஜுல்பிகார் அலி பூட்டோவின் அழைப்பின் பேரில் உத்தியோகபூர்வமான விஜயத்தை மேற்கொண்டு அவர் அங்கு செல்கிறார்.

செப்டம்பர் 4ந் திகதி முதல் 7-ந் திகதி வரை பாகிஸ்தானில் பிரதமர் ஸ்ரீமாவோ விஜயம் மேற்கொள்வார் என்று இன்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு இன்று அறிவித்தது.

சைப்பிரஸில்

## மீண்டும் கடும் சண்டை!

## ஐ. நா பலத்த எச்சரிக்கை

லண்டன், ஜுலை 24

சைப்பிரஸில் மீண்டும் சண்டை பரவலாக நடைபெறுவதாகத் தகவல் வந்துகொண்டிருக்கிறது.

கிரேக்கப் படைகளுக்கும் துருக்கியப் படைகளுக்குமிடையில் ஆங்காங்கே பலத்த மோதல்கள் இடம் பெற்றதாக செய்திகள் கூறின.

இதேசமயம் உடனடியாக பூரண போர் ஒய்வைக் கடைப்பிடிக்கும்படி ஐ. நா. பாதுகாப்புச்சபை கடும் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. தெருக்களில் இருதரப்பினரும் அரக்கத்துரத்திச் சுட்டுக்கொண்டிருப்பதைக் கண்டதாக நிக்கோஷியாவிலுள்ள பிரிட்டிஷ் தூதரக பார்வையாளர்கள் கூறினார்கள். பிரிட்டன், துருக்கி கிறீஸ் ஆகிய நாடுகளுக்கிடையிலான மூத்தரப்பு அமைதி மகாநாடு நாளை வெள்ளியன்று ஜெனிவாவில் நடைபெறும்.

## இந்திய விண்வெளிக்கலம் 1978-ல் புறப்படும்

புதுடில்லி, ஜுலை, 24

இந்தியாவின் முதலாவது சொந்த விண்வெளிக்கலம் 1978-ம் ஆண்டு விண்வெளிக்குச் செலுத்தப்படும்.

இத்தகவலை இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி இன்று இந்திய பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

## ஆசியாவுக்கு பொருத்தமான புதிய நெல் வகை!

கொழும்பு, புதன்

ஆசியாவுக்குப் பொருத்தமான புதிய நெல்வகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஐ. ஆர். 26 என்ற இந்த இன வகை நெல் பிலிப்பைன்ஸ் அரிசி ஆலை ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வரண்ட பிரதேசங்களுக்கு ஏற்ற நெல்லை இது என்று தெரிவிக்கப்படுகிறது.

பூச்சி, மற்றும் கிருமிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க கூடிய சக்தியை இந்த ஐ. ஆர். 26 ரக நெல் கொண்டிருப்பதாக பிலிப்பைன்ஸ் அரிசி ஆலை ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த தானிய ரசாயன நிபுணர் தெரிவிக்கிறார்.

ஐ. ஆர். 8 ரக நெல்லைவிட சிறந்த ரக நெல் இது வென்றும், 16 ரக நெல்களில் இது முதலிடத்தை பெறுகிறதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இன்று நடக்கும் கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணக் கல்லூரியைப் பல்கலைக்கழக வளாகத்துக்காக எடுப்பதை ஆட்சேபிக்குமுகமாக இன்று யாழ்ப்பாணக் கல்லூரி ஒய்வு மண்டபத்தில் பெற்றோர் கூட்டமொன்று நடைபெறுமென்று சட்டத்தரணி திரு. க. குணரத்தினம் அறிவிக்கிறார்.

## 86-வது மாநாடு

யாழ்ப்பாணம், வியா.

சைவபரிபாலன சபையின் 86-வது சைவமகாநாடு நாளை யாழ்ப்பாணத்திலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பமாகும்.

இம்மகாநாட்டில், அண்ணாமலைப்பல்கலைக்கழக மெய்ப்பொருள் இயல் துறைத் தலைவர் திரு. இராமலிங்கம் கலந்துகொண்டு உரைநிகழ்த்தவிருக்கிறார்.

திரு. இராமலிங்கம் இன்று [illegible] நடைபவர். (ஈ)

கதிர்காம பலாத்காரவழக்கு

## அரசதரப்பு சாட்சியம் முடிந்தது

காலி, புதன்

கதிர்காமம் கமனாவதி பலாத்காரவழக்கில் அரசதரப்பு சாட்சியங்களை அரச சட்டத்தரணி திரு. எஸ். எல். குணசேகர முடித்துக்கொண்டார்.

எதிர் தரப்பு தமது வழக்குரைப்பை ஆரம்பித்தது. இன்று 1971-ம் ஆண்டு அம்பாந்தோட்டைப் பகுதியில் ராணுவ இணைப்பு அதிகாரியாக விளங்கிய கேணல் [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

## நல்லூர்க் கந்தன் சுற்றுடல் 24 மணிநேரமும் சுத்திகரிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் உற்சவத்தையொட்டி முன்னிட்டு ஆலய சுற்றுடலை புனிதமாகவும், சுத்தமாகவும் வைத்திருக்க 24 மணி நேரமும் சுத்திகரிப்புக்காரர்கள் சுத்தஞ்செய்துவருகின்றனர்.

சுகாதாரப் பகுதியினர் சுத்தமாக வைத்திருக்கும்படி சுவரி விளம்பரங்களை ஒட்டியும் நகரங்களில் குப்பை கூளங்களைப் போடுவதை தவிர்க்குமாறும் கேட்டுள்ளனர்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் குப்பை கூழங்களை உடனுக்குடன் அகற்ற இரவு பகலாக குப்பைகளை வண்டிகள் ஏற்றிச்செல்லுகின்றன. மாநகரசபை வீதிகள், சந்தைகள் போன்ற இடங்களில் மிகப் பிரகாசமான மின்சார விளக்குகளை அமைத்துள்ளன கடலைக்கடை, காப்புக் கடை, மிட்டாய்க்கடை போன்ற கடைகள் புதிய சந்தையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

புழுதியான இடங்களில் மாநகரசபையினர் தண்ணீர் ஊற்றி புழுதி கிளப்பாவண்ணம் சுத்தம் செய்துள்ளனர்.

நல்லூர்க் கோவில் பகுதிகளில் வரும் மக்களிடம் தெருவீதியில் குப்பை கூழங்களை கொட்ட வேண்டாம் என்றும் அதற்குரிய தொட்டிகளில் குப்பைகளைப் போட வேண்டும் என்றும், யாழ். மாநகர மேயர் அல்பிரட் துரையப்பாவும், பொதுச் சுத்திகரிப்புப் பொறுப்பதிகாரி திரு. செ. செல்வயாகனும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சைக்கிளில் சென்றவர்

## மரத்தில்மோதி முள்ளுக் கம்பியில் சிக்கி மரணம்

யாழ்ப்பாணம், வியா.

மைத்துனர் வீட்டிற்கு இரவு 9 மணிக்குச் சைக்கிளில் சென்ற ஒருவர் வழியில் கிடந்த மரக்குற்றியில் மோதி முள்ளுக்கம்பிக்குள் சிக்கி, சுமார் ஒருமணி நேரம் கஷ்டப்பட்டபின்னர் மரணமானார்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சந்திரபாலன் என்பவரின் மரண விசாரணையின் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. சி. [illegible] மரண விசாரணை நடத்தினார்.

கம்பிகளுக்குள் சிக்கி, இரத்தக்காயத்துடன் [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

JAFFNA COLLEGE LIBRARY 24 JUL 1974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### தேவை

பெற்றோல் நிலையத்தில் கடமையாற்றக் கூடியபம்பர் (Pumper) தேவை. நேரில் வரவும். செ. கருணாகரன், 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 378

### விற்பனைக்கு

கைதடி கோப்பாய் வீதியை முகப்பாயமைந்த, வீடுகட்டுவதற்கு உகந்த, தென்னை, மா, பனா, வேம்பு முதலிய நல்ல மரங்களும் கிணறுமுள்ள பத்துப்பரப்புக்காணி விற்பனைக்குண்டு. இக்காணி கைதடிச் சந்தியிலிருந்து ¼ கட்டை தூரத்தில் வயோதிபசாலை, நவீனட் ஜூனியர் செகிடர் பாடசாலை, ஆயுள்வேத ஆஸ்பத்திரி, கிராம சேவகர் கந்தோர் முதலியவற்றுக்குச் சமீபமாக உள்ளது. தொடர்புகொள்ளவும்: A. சுவாமிநாதராஜா, 22, குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 374

வீட்டுத் தளபாடங்கள் இயந்திர வகைகள் கொள்வனவு விற்பனவு செய்வதற்கு ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். பிரான்ஸிஸ் என்ரப்பிறைசஸ், 313/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 302

### இன்று

### வேல்ஆனந்தனின் 300வது நாட்டியாஞ்சலி

யாழ்ப்பாணம், வியா.

சர்வதேச நடனக் கலைஞர் வேல்ஆனந்தனின் நடனக்குழு அளிக்கும் 300-வது நாட்டியாஞ்சலி இன்று மாலை 6-15 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகின்றது. கலைக்கோவில் நாட்டிய திருவனத்தின் தலைவர் சட்டத்தரணி இ. நாகராசாவின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் யாழ். காரியாதிகாரி திரு. யோகநாதன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

'மீணயாழி' என்ற புதிய நாட்டியநாடகம் நிகழ்ச்சியில் அரங்கேற்றப்படும்.

## வானொலி

25 - 7 - 74 வியாழன்

(செய்திகள் காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

காலை 6-00 மங்கள இசை, 6-05 சைவ நற்சிந்தனை-திருஷ்ணபிள்ளை, 6-10 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-15 சமாலை-கத்தர லங்கார ம் எஸ். பாலசிங்கம், 6-50 பஜனை. 7-05 நாதசுரம் காருக்குறிச்சி பி. அருணாசலம் ஆணடான்கோவில் ஏ. வி. செல்வரத்தினம், 7-30 நாடு செழிக்க நாமீட்டும் சாதனைகள், 7-45 பாட்டு-அம்மன் தேவாரங்கள், 8-15 முஸ்லிம் நிகழ்ச்சி.

மாலை 6-15 மழலைச் செல்வம், 6-45 மனித புராணம்-குடும்பச்சித்திரம் எழுதியவர் இளங்கீரன், தயாரிப்பு: கே. எம். வாசகர், 7-02 கமமும் புறமும், 7-15 தமிழ்மூலம் சிங்களம்-வகுப்பு 3, 7-35 எழுத்தும் கருத்தும், 7-50 விஞ்ஞானப்பேச்சு, 8-02 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-10 அறிவிப்புகள், வாத்தியஇசை, 9-30 கலைமஞ்சரி தயாரித்தளிப்பவர்: சித்திரலேகா மௌனகுரு. இன்றைய தமிழ்நாட்டு நிலைபற்றி ஒரு தயாரிப்பாளருடன் பேட்டி. (தயாரிப்பாளர்- . நாசீசியஸ்). விண்ணிலிருந்து மண்ணுக்கு-புத்தக விமர்சனம் இ. முருகையன், புதுமைப்பித்தனும் புதுக்கவிதையும்-கருத்துரை, 10-00 வசந்தகலைக்காரர்- நாதஸ்வர பொன்னையா பிள்ளை, 10-30 செய்திச்சுருக்கம்.

---

1973-ம் ஆண்டு 44-ம் இலக்க நீதி நிருவாகச்சட்டத்தின் 283-ம் பிரிவின் கீழ் மரணச் சொத்து நிருவாகத்தத்துவப்பத்திரம் வழங்குவதற்கான

## இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப்பொறுப்பாளர் முன்னிலையில்.

யாழ்ப்பாணம் நல்லூர் கைலாசபிள்ளையார்கோவிலடியில் வசித்துக் காலம் சென்ற கந்தையா பரம்சோதியின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்கள் சம்பந்தம்பட்டவை.

காலம் சென்றவர் யாழ்ப்பாணம் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த கந்தையா பரம்சோதி கைம்பெண் வள்ளியம்மை.

விண்ணப்பகாரரும்

வலயம்: யாழ்ப்பாணம்

இல: 2952/T

மற்றும்

யாழ்ப்பாணம் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த

1. பரம்சோதி மகள் இந்திராணி.
2. பரம்சோதி மகள் மஞ்சுளமலர்.
3. பரம்சோதி மகள் யோகேஸ்வரி.
4. பரம்சோதி மகள் விசயலெட்சுமி.
5. காரைநகர், கோவளத்தைச்சேர்ந்த கந்தையா சிவசுப்பு. 4ம் பிராயமற்ற பிரதிவாதியின் பாதுகாவலர்.

பிரதிவாதிகள்

1973-ம் ஆண்டு பங்குனி மாதம் 28-ம் திகதியைக் கொண்ட விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மூல்லிய கூறுதிக் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிருபிக்கப்பட்டுள்ள தென்று திருப்தியடைந்ததின் பேரில் மேலதிக பகிரங்க நம்பிக்கைப்பொறுப்பாளர் எம். ஏ. எல்லப்பொல ஆகிய நான் கட்டளையிடுகிறதாவது.

இக்கட்டளையின் அறிவித்தலைப் பெற்ற எவராவது அல்லது வேறு எவராவது 1974-ம் ஆண்டு ஆடி மாதம் 29-ம் திகதி அல்லது அதற்கு முன் தக்க காரணம் காட்டி ஆட்சேபம் தெரிவித்தாலன்றி.

அ. மேற் சொல்லப்பட்ட காலம் சென்றவர் விட்டுச் சென்ற மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கும் மற்றும் பெறுமதிகளுக்கும் நிருவாகத்தத்துவப்பத்திரம் பெறுவதற்கு மேற் சொல்லப்பட்ட விண்ணப்பகாரியே மேற்சொல்லப்பட்ட காலம் சென்றவரின் கைம்பெண் என்றவகையில் உரித்துடையவர் என்றும் அவ்வண்ணமே அவருக்கு நிருவாகத்தத்துவப்பத்திரம் வழங்கப்படுகிறதென்றும்.

ஆ. இம் மரணச் சொத்து நடவடிக்கை சார்பாக மேற்கூறப்பட்ட 5-ம் பிரதிவாதியை பராயமற்ற 4-ம் பிரதிவாதியின் பாதுகாவலராக நியமிக்கப்படுகின்றார் என்றும் இத்தால் 283 (1) (2) ம் பிரிவின் கீழ் கட்டளையிடுகிறேன்.

1974-ம் ஆண்டு ஆனி மாதம் 25-ம் திகதி.

ஒப்பம்
சோ. இராசநாதன்.
பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளருக்காக,

வரைந்தவர்:
சி. சிதம்பரநாதன்.
விண்ணப்பகாரரின் சட்டத்தரணி. 218

---

யாழ்ப்பாணம் மாநகரசபை

## கேள்வி அறிவித்தல்

யாழ். மாநகரசபை ஆணையாளரால் துரையப்பா ஸ்ரேடியத்துக்கு பவிலியன் [2-வது நிலை] நிர்மாணிக்க கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் 6-8-1974-ம் திகதி பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(2) யாழ். மாநகரசபை வேலைப்பகுதிப் பொறியியலாளரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பப் படிவங்களை ரூபா 200/- கேள்வி வைப்புப் பணமாகவும், ரூபா 25/- மீளப் பெறமுடியாத கேள்விப் பத்திரப் பணமாகவும் செலுத்தி 31-7-1974-ம் திகதி பகல் 12-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டு தேவையான ஒப்பந்தம் கைச்சாத்தானதும் கேள்வி வைப்புப் பணம் ரூபா 200/ திருப்பிக் கொடுக்கப்படும்.

(3) எல்லாக் கேள்விகளும் பிரதிகளோடு கூர்ந்து முத்திரையிடப்பட்டு அனுப்பப்படும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'துரையப்பா ஸ்ரேடியத்துக்கு பவிலியன் (2-வது நிலை) நிர்மாணித்தல்' என எழுதப்பட்டு மாநகரசபை ஆணையாளர், நகரமண்டபம் யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

(4) மாநகர சபையுடன் அல்லது பொது வேலைப்பகுதியுடன் ஒரு லட்சம் ரூபாவுக்கு ரூபா (100,000) குறையாத தொகைக்கு பதிவு செய்துள்ள கொந்தராத்துக்காரர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். மேற்படி பதிவை நிரூபிக்கும் அத்தாட்சிப் பத்திரங்களை சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

(5) கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அனுமதி பெற்ற பிரதிநிதிகள், மாநகர சபை ஆணையாளர் காரியாலயத்தில், 6-8-1974-ம் திகதி மாலை 3-30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் போது பிரசன்னமாக அனுமதிக்கப்படுவர்.

(6) கேள்விக்கான சகல நிபந்தனைகளும் முற்றாகப் பூர்த்தி செய்யப்படாத பட்சத்தில் அந்தக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(7) மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் வேலைப்பகுதி பொறியியலாளருக்கு விண்ணப்பித்து அறிந்துகொள்ளலாம்.

கே. சிவஞானம்,
பதில் ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

நகர மண்டபம்,
யாழ்ப்பாணம்.
23-7-74. 221

## அறிவித்தல்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் 4000 மேற்பட்ட வெற்றுச்சாக்குகளும் 45 கலன் பழுதடைந்த வெற்றுத்தகரங்களும் வெற்றுப் பெட்டிகளும் கேள்விப் பத்திரத்தின் மூலம்விற்பனைக்கிருக்கின்றன. வெற்றுச் சாக்குக்கு ரூபா 200/- வெற்றுப் பெட்டி வெற்றுத்தகரத்திற்கு ரூபா 25/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும். கேள்விப்பத்திரம் 1-8-74-ம் திகதி மாலை 4 மணிக்கு முன்னதாகக்கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர். 223

---

# சைப்ரஸ் அதிபராக மீண்டு(ம்)
# மக்காரியோஸ் பதவி ஏற்ப(ார்)

நிக்கோஷியா, ஜூலை 24

சைப்பிரஸ் அதிபராக மீண்டும் ஆர்ச் பிஷப் மக்காரியோஸ் விரைவில் பதவியேற்பார். இதுவரை மக்காரியோஸ் அரசை புரட்சிமூலம் கவிழ்த்து பதவியிலமர்ந்திருந்த திரு. சாம்ஸன் நேற்று தனது பதவியினின்றும் ராஜினாமாச் செய்தார். தொடர்ந்து இடைக்கால அதிபராக திரு. கிளெடிடைஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. கிளெடிடைஸ் சைப்பிரஸ் பாராளுமன்றத்தின் சபாநாயகராக இதுவரை பதவிவகித்தவர். இவர் சைப்பிரஸ் தீவின் இருதரப்பு மக்களதும் நன்மதிப்பைப் பெற்றவர்.

இடைக்கால அரசை திரு. கிளெடிடைஸ் அ... மாறு வாஷிங்டனிலி... திரு. மக்காரியோஸ் ப... ருந்தார். இன்னும் ... வாரங்களில் திரு. ... யோஸ் தாயகம் ... பதவியேற்பார். திரு. ... டைஸ் அதிபரானத... டலும் அங்காரா... டுத் தெரிவித்துள்ள...

புரட்சிமூலம் ஆட்... கைப்பற்ற முயன்ற ... ஸாம்ஸன் தனது ... மாவை சமர்ப்பிக்க மு... கோஷியா ... மியில் உரை... கையில் தாம் ... பெற்ற தனது பணி... விட்டதாகவும் ம... யோஸ் அரசிடமிருந்... போக நடவடிக்கைக... யடித்து மக்கள் சுபி... வாழ்வதற்கு வசதி... தமக்குப் பெரிய சந்த... அளிக்கப்படவில்லை ... தெரிவித்தார்.

சைப்பிரஸ் அரசியல... வத்தின்படி திரு. ... டைஸுக்குப் பூரண ... ரம் அளிக்கப்பட்டுள்ள...

## கிரேக்கத்தில் இராணுவ ஆட்சிக்கு முடிவு!

ஏதென்ஸ், ஜூலை 27

கடந்த ஏழு வருடங்களாக கிரீஸில் இருந்துவந்த ராணுவ ஆட்சி முடிவுக்கு வரவுள்ளது. அங்கு சிவிலியன் ஆட்சி முறை உருவாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

முன்னாள் ராணுவ அரசினருக்கும் சிவிலியன்களுக்குமிடையில் நேற்று நடைபெற்ற ஐந்துமணி நேரப் பேச்சுவார்த்தையின் பின்பே இம்முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த பதினொரு வருடங்களாக நாடு கடத்தப்பட்டு பாரிஸில் வாழ்ந்துவந்த திரு. கரமன்லிஸ், புதிய அரசை அமைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

பாரிஸில் இருக்கும் அவர் இப்பொழுது ஏதென்ஸுக்கு விரைகின்றார் எனவும் அறிவிக்கப்பட்டது.

## குடும்பச் சண்டையால் இளம்தாய் தற்கொலை

தெல்லிப்பழை, புதன்

மறுமணம்செய்துகொண்ட இளம்பெண் குடும்பசண்டையால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார்.

அம்பனைரையூரைச்சேர்ந்த திருமதி சண்முகநாதன் மீனாட்சிப்பிள்ளை (30 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவரது மரணம் சம்பந்தமாக பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன்விசாரணை நடத்தினார். ஏற்கனவே திருமணம் செய்து மூன்று பிள்ளைகளின் தாயான இப்பெண் மறுமணம் செய்து மூன்றுவருடங்கள் என்றும் மறுமணத்தின் மூலம் ஒரு குழந்தை உண்டென்றும், கணவனுடன் ஏற்பட்ட சச்சரவு காரணமாக நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அம்பன் கிராமசேவகர் வி. சேதுநாயகமும் சாட்சியமளித்தார். தற்கொலைஎனத் தீர்ப்புவழங்கப்பட்டது. [அ]

## சோமசுந்தரப் புலவர் நினைவுப் பேச்சுப் போட்டி

சோமசுந்தரப் புலவர் நினைவுப் பேச்சுப் போட்டியொன்று 'ஈழநாடு' ஸ்தாபனத்தினால் நடத்தப்படவிருக்கிறது. கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் பயிலும் மாணவ மாணவியருக்காக நடத்தப்படும் இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவ மாணவியர் தத்தமது பாடசாலை அதிபர்கள் அல்லது பெற்றோரின் அத்தாட்சியுடன் 31-7-74 த் திகதிக்கு முன்பாக ''ஆசிரியர், ஈழநாடு காரியாலயம் த. பெ. எண் 49 யாழ்ப்பாணம்.'' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் ''சோமசுந்தரப்புலவர் நினைவுப் பேச்சுப் போட்டி'' என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

ஒரு பாடசாலையிலிருந்து மூவர் மட்டுமே விண்ணப்பிக்கலாம். வயது எல்லை இல்லை.

புலவரின் வாழ்க்கை வரலாற்றைச் சிறப்பாகவும், அதனோடு தொடர்புடைய கவிதைகளைப் பொதுவாகவும் கொண்டதாகப் பேச்சு அமைதல் வேண்டும்.

பேச்சு 10 நிமிடத்திற்கு அதிகரிக்கக்கூடாது.

போட்டியில் முதலிடம் பெறும் மாணவருக்குப் புலவரின் பேரனும், பல் டாக்டருமான திரு. ப. சோ. பாரதியினால் அன்பளிக்கப்படும் தங்கப்பதக்கம் வழங்கப்படும். 2ம், 3ம், இடங்களைப் பெறும் மாணவர்களுக்குச் பரிசுகள் வழங்கப்படும். போட்டி நடைபெறும் இடமும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் கீழ்க் காணும் கூப்பனை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

### சோமசுந்தரப்புலவர் நினைவுப் பேச்சுப்போட்டி

விண்ணப்பதாரரின்
பெயரும் விலாசமும்: ..........................................
..........................................

பாடசாலைப்
பெயரும் விலாசமும்: ..........................................
..........................................

வகுப்பு: ....................
வயது: ....................
பால்: ....................

.................... ....................
அதிபரின் கையொப்பம் — விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

## ஆசிரியர் சங்(க) கூட்டம்

புங்குடுதீவு, வி...

இலங்கை ஆசிரிய... தின் வார்காவற்று... டாரக் கிளையின் விசே... டம் ஒன்று நாளை ... கிழமை புங்குடுதீவு ம... தியாலத்தில் நடைபெ... ளது. சங்கத்தின் ... மாவட்டக் கிளைத் ... திரு. வி. இராசநா... செயலாளர் திரு. எ... சுந்தரலிங்கம், ... செயலாளர் திரு. எ... யாப்பிள்ளை ஆகியோ... கூட்டத்தில் கலந்து... சிறப்புரையாற்றுவர்.

கல்வியமைச்சின் ... றச் சுற்று நிருபம்பற்... யங்களும், இதுவரை ... கப்படாத ஆசிரிய... சம்பளம் சம்பந்தமா... யங்களும் ஆசிரியர் ச... பட்ட வேறு சில ... களும் இக்கூட்டத்தி... லிவாக ஆலோசனைக்... துக்கொள்ளப்படு... கிளைச் செயலாளர் தி... ரி. தேவராசா தெரிவி...

## மயக்கமருந்துகொ(டுத்து) தாக்கினர்களா(ம்)

நல்லூர்...

நித்திரையிலிருந்த ... பரையும் சிறுவனையும் ... னுள் புகுந்த இனம் தெ(ரியாத) நபர்கள் மயக்கம ... கொடுத்து தாக்கின(ர்) ... நல்லூர் சட்டநாதர் ... லடியில் நடைபெற்... கூறப்படும் இச் சம்பவ... பொலிசார் புலன்வி... செய்து வருகின்றன(ர்).

சம்பவதினம் இ... இருவரும் நித்திரையி... கும் போது வீட்... யாரோ புகுந்த சத்த... கேட்ட சிறுவன் எ... பார்த்தானும். இதனை ... இனம் தெரியாத நபர்... பொல்லாலும் தடி... தாக்கப்பட்டு மயக்க... தானும். வயோதிபரு... னும் யாழ்ப்பாணம் ஆ(ஸ்)... பத்திரியில் அனுமதி... பட்டதாகவும் விசார... தெரிவிக்கப்பட்டது.

வயோதிபரைப் ... தனை செய்த டாக்... இவருக்கு மயக்க ... கொடுத்த பின்னரே ... கப் பட்டாரெ... சிறுவன் தாக்கப்பட்ட... தான் மயக்கம... னென்றும் தெரிவித்த... பொலிசார் விசாரணை ... படுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...மீண்டும் ... ஏற்பார்

...ாட்டிடைகல அமைச்சு
வாஷிங்டனிலிருந்து
மக்காரியோஸ் பணிக்கு தி
...ார். இன்னும் ஒரு
...ங்களில் திரு. மக்காரி
...ல் தாயகம் திரும்பி
...பேற்பார். திரு. கிளெடி
...ஸ் அதிகாரத்துக்கு
...ம் அங்காராவும் பாராட்
...தெரிவித்துள்ளன.
...ட்மூலம் ஆட்சியைக்
...பற்ற முயன்ற திரு.
...ஸன் தனது ராஜ
...ளை சமர்ப்பிக்க முன் ...
...ஷிய வாசெ
... உரையாற்று
...யில் தாம் பொறுப்
...ற தமது பணிமுடித்து
...ளாகவும் மக்காரி
...ஸ் அரசிடமிருந்து ...
... நடவடிக்கைகளை முறி
...து மக்கள் கபீட்சமாக
...வதற்கு வசதியளிக்க
...குப் போதிய சந்தர்ப்பம்
...கப்படவில்லை என்றும்
...வித்தார்.
...சைப்பிரஸ் அரசியல் சாச
...ன்படி திரு. கிளெடி
...ஸுக்குப் பூரண அதிகா
...ளிக்கப்பட்டுள்ளது.

## ...ஆசிரியர் சங்கக் கூட்டம்

புங்குடுதீவு, வியாழன்
...லங்கை ஆசிரிய சங்கத்
...வர்ளவற்றுறை வட்
...க் கிளையின் விசேட கூட்
...ன்று நாளை வெள்ளிக்
...ம புங்குடுதீவு மகாவித்
...லத்தில் நடைபெறவுள்
... சங்கத்தின் யாழ்.
...ட்டக்கிளைத் தலைவர்
...வி. இராசநாயகம்,
...ளாளர் திரு. எஸ். கே.
...ரலிங்கம், அமைப்புச்
...லாளர் திரு. எஸ். சந்தி
...பிள்ளை ஆகியோர் இக்
...த்தில் கலந்துகொண்டு
...புரையாற்றுவர்.
...ஆசிரியர்களின் இடமாற்
...த்து நிருபம்பற்றிய விட
...ளும், இதுவரை வழங்
...ாத ஆசிரியர்களது
...ளம் சம்பந்தமான விட
...ளும் ஆசிரியர் சம்பந்தப்
... வேறு சில பிரச்னை
... இக்கூட்டத்தில் முக்
...ாக ஆலோசனைக்கெடுத்
...ள்ளப்படுமென
... செயலாளர் திரு. எஸ்.
...வராசா தெரிவித்தார்.

## ...மயக்கமருந்துகொடுத்து ...தாக்கினர்களாம்

நல்லூர், புதன்
...இரவில் நித்திரையிலிருந்த வயோதி
...யும் சிறுவனையும் வீட்டி
...புகுந்த இனம் தெரியாத
...ள் மயக்க மருந்து
...த்து தாக்கினர்களாம்.
...ர் சட்டநாதர் கோவி
...ல் நடைபெற்றதாகக்
...ம் இச்சம்பவம்பற்றி
...பொலிசார் புலன்விசாரணை
...து வருகின்றனர்.
...வதினம் இவர்கள்
...ளும் நித்திரையில் இருந்த
...போது வீட்டினுள்
... புகுந்த சத்தத்தைக்
... சிறுவன் எழும்பிப்
...தாலும். இதனையடுத்து
... தெரியாத நபர்களால்
...லாலும் தடியாலும்
...ப்பட்டு மயக்கமடைந்
...ம். வயோதிபரும் சிறுவ
...யாழ்ப்பாணம் பெரியாஸ்
...ரியில் அனுமதிக்கப்
...தாகவும் விசாரணையில்
...விக்கப்பட்டது.
...வயோதிபரைப் பரிசோ
... செய்த டாக்டர்கள்
...க்கு மயக்க மருந்து
...த்த பின்னரே தாக்
...ப்பட்டாரென்றும்
... தாக்கப்பட்டதினால்
... மயக்கமடைந்தா
...ரும் தெரிவித்தனர்.
...பொலிசார் விசாரணையில் ஈடு
...ள்ளனர்.

# ஆசிரிய பயிற்சிக் காலம் நீடிப்பு

மாவிட்டபுரம், புதன்

'ஆசிரியப் பயிற்சிபெறும் ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிக்காலம் 2 ஆண்டிலிருந்து 3 ஆண்டாக அதிகரிக்கப்பட இருக்கிறது'

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் பிரிவு தலைமை வித்தியாதிபதி டாக்டர் காரியவாசம் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் வைத்து இத்தகவலை வெளியிட்டார்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை நிலைமைகளை ஆராய்ந்து அறியும் முகமாக அங்கு விஜயம் செய்த தலைமை வித்தியாதிபதி ஆசிரிய மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இதுவரை காலமும் ஆசிரியப்பயிற்சிபெறும் மாணவர்களின் பயிற்சிக்காலம் 2வருடமாக இருந்தது. ஆனால் தற்போது அமுல் செய்யப்பட்ட புதிய கல்வித்திட்டத்தின்படி இப்பயிற்சிக்காலம் 3 வருடமாக அதிகரிக்கப்பட இருக்கிறது. இம் மாற்றம் விரைவில் அமுல்செய்யப்படும். இதையடுத்து ஆசிரிய மாணவர்கள் பட்டப்படிப்பு உயர்கல்வி கற்கவும் வசதிகள் செய்துகொடுக்கப்படும் என்றார்.

கலாசாலை அதிபர் திரு. வி. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இச்சொற்பொழிவு நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஆசிரியப் பயிற்சிபெறும் மாணவர்கள் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் மதித்து நடக்கவேண்டியது அவசியம். அப்போதுதான் அவர்கள் நன்கு பயிற்சிபெற்று திறமை யானவர்களாக திகழ்வதுடன் எதிர்காலத்தில் நல்லதோர் சமுதாயத்தையும் அவர்களால் கட்டிவளர்க்கக் கூடியதாயிருக்கும். இதை உணர்ந்து அவர்கள் நடந்துகொள்ளவேண்டும்" என்றார்

கலைநிகழ்ச்சிகளும் இராப் போசனவிருந்தும் இடம்பெற்றன.

# "கலைஞர் மத்தியில் தேசிய ஒற்றுமையுணர்வு அவசியம்"

கொழும்பு, புதன்

இலங்கையில் கலைஞர்கள் எல்லோரும் ஒரேசமூகத்தினர் அவர்களில் வேறுபாடே இடையாது. ஒருதாய் பெற்றபிள்ளைகள்தான் இவர்கள் என்று சொன்னாலுங்கூட தவறாகாது. நாட்டின் ஒற்றுமைக்குப் பாலமமைப்பவர்கள் கூட கலைஞர்கள்தான் இம்மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைத்ததற்குக்கூட தேசிய ஒற்றுமையை கலைஞர்களிடையே நிலைநாட்ட வேண்டுமென்பதுதான் குறிக்கோளாகும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா ஐக்கிய கலைஞர் மன்றத்தை கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசிய 'நந்து விளக்கு ஆனந்தன் கூறினார்.

போஷகராக நியமிக்கப்பட்டுள்ள திரு. சிவசங்கர நாதன் பேசுகையில், குத்துவிளக்கு ஆனந்தனின் இம்முயற்சி போற்றத்தக்குரியது. அவருடைய ஏனைய கலைஞர்களும் ஒன்றிணைந்து இலங்கையில் சிங்கள - தமிழருக்கிடையில் கலைமூலம் ஒற்றுமைநிலை நாட்ட முன்வரவேண்டும். என்றார்.

திரு. ஏ. குலலிங்கம் பேசுகையில் நாட்டின் பல கலைஞர்கள் ஒற்றுமையுணர்வோடிருந்தாலும் ஒன்றுசேர்வதற்கான வாய்ப்பில்லாமலிருந்து வந்துள்ளனர்கள். அந்த நிலைமையை எமது ... போக்கி அவர்களின் தேசிய ஒற்றுமை உணர்வை விரிவடைய ... வழிவகுத்துள்ளது என குறிப்பிட்டார்.

திரு. அனுரா பண்டாரநாயகா வையும் போஷகர்களில் ஒருவராகக் கொண்டு நிர்வாக சபை அங்கத்தினர்கள் ஏகமனதாய் ரீதியில் தெரிவுசெய்யப்பட்டது.

# வடபிரதேச இ. போ. ச. விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், வியா.

இம்மாதம் 27-ம் 28-ம் திகதிகளில் இலங்கை போக்குவரத்துச் சபை யாழ். மாவட்ட விளையாட்டுப் போட்டி யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் கிளிநொச்சி, காரைநகர், மூல்லைத்தீவு பருத்தித்துறை கோண்டாவில் டிப்போக்கள் பங்குபற்றுகின்றன.

இ. போ. ச. ஆளணி முகாமையாளர் ய. உலகபுவ தம்பதிகள் பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள்.

விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகளை வட பிரதேச கட்டுப்பாட்டு அதிகாரியுடன், இ போ. ச. வடபிரதேச விளையாட்டுக் கழக செயலாளர் திரு. கே. ஆவரசாவும் கோண்டாவில் டிப்போ விளையாட்டுக்கழகச் செயலாளர் திரு. ஜே. ஜே. பாக்கியராசாவும் கவனித்து வருகின்றனர்.

இப்போட்டியில் முதல்பரிசு பெறும் வீரர்களை அகில இலங்கை விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றுவர்.


**வெலிங்டன்**
(...)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஏ. வி. எம். ராஜன்
**அன்னையும் பிதாவும்**

**சாந்தி** (...)
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி - அஞ்சலிதேவி
நடித்த
**வீரக்கனல்**

**நாகம்ஸ்**
(...)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஏ. வி. எம். ராஜன்
காஞ்சனா
**வீர அபிமன்யு**

நாளை முதல்
மாபெரும்
வெளியீடு
**றியோ**
(யாழ். நகர மண்டபம்)
தினசரி 10 30, 4-45
7-15, 9-45
அவன் பெயர்........
அவன் தொழில்........
அவன் விருப்பம்........
ஜிம் பிறவுண்
ஸ்ரெலா ஸ்ரீவன்ஸ்
நடித்த
**ஸ்லாய்ரர்**
**SLAUGHTER**
சினிமாஸ்கோப்-கலர்
(வயது வந்தோர்க்கு மட்டும்)

இன்று மட்டும்
10-30, 2-00
4-4 , 7-15, 9-45
**ஆபிரிக்காவின்**
**இரகசியக்**
**காடுகள்**






REGAL - (Jaffna) Daily: 4-45, 7, 9-30 p.m.
Full Length Feature Film on Animal Wild Life with
No Human Beings Appearing in the Film
**AFRICAN ELEPHANT**
(color)
(Special Shows may be arranged to Students)

**ஸ்ரீதர் ...** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 4-45, 7-00, 9-45
**மக்னம் போர்ஸ்**

**ராணி** (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர் ஜெயலலிதா
முத்துராமன் - நம்பியார்
தினசரி 4 காட்சிகள்
**ஒரு தாய்மக்கள்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
சிவாஜி - உஷாநந்தினி
நம்பியார் - முத்துராமன்
தினசரி 4 காட்சிகள்
நடித்த
**பொன்னூஞ்சல்**

**மனோஹரா** (யாழ்ப்பாணம்)
மகத்தான 4-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் கே. ஆர். விஜயா
சுந்தரராஜன் மனோகர்
**வாயாடி**
கதை, வசனம்
டைரக்ஷன்:
மதுரை மாறன்

**வின்சர் யாழ்ப்பாணம்**
அசோக் பிக்சர்ஸ் அளிக்கும்
**வந்தாளே மகராசி**
தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-15, 9-45
★ ஜெய்சங்கர் ★ டி. கே. பகவதி
★ ஜெயலலிதா (இரு வேடங்களில்)
★ புஷ்பலதா ★ எம். என். ராஜம்
நடித்தது
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:
இயக்குநர் திலகம்:
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி
பி. ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, சனி, ஞாயிறு
காலை 10-30
★ டி. ஆர். ராமச்சந்திரன்
★ தங்கவேலு
★ பி. கே. சரஸ்வதி
நடித்த
**மேதாவிகள்**

27-ந் திகதி முதல்
★ ஜெமினி ★ சாவித்திரி
நடித்த
**மாதர்குல மாணிக்கம்**

**லிடோ** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
**கஸ்தூரி சுவந்த**
(சிங்களம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இன்று செய்யவேண்டியதை இன்றே செய்தல் துணிவுடையவனின் ஓர் அறம். அது ஒழுக்கத்தில் நிலையற்ற கோழை மனிதனுக்கு ஒரு மறம்.

—சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

25 - 7 - 74


## கவலைதரும் தகவல்

யாழ். மாவட்டத்தின் அரிய சாதனைகள் பற்றி நாம் அடிக்கடி பெருமைதரும் செய்திகளை பிரசுரிப்பதில் மகிழ்ச்சி அடைவதுண்டு.

யாழ். பொலிஸ் அதிபர் கடைசியாக வெளியிட்ட செய்தியையிட்டு இப்பகுதி மக்கள் எந்தவகையிலும் பெருமிதமடைவதற்கு இடமில்லை. கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் 542 தற்கொலைகள் நடந்திருக்கிறதாக யாழ். பொலிஸ் அதிபர் தெரிவித்திருக்கிறார். யாழ். பிரதேசம் போன்ற நாகரிக வளம்பெற்ற இடத்துக்கு இது அசாதாரணமான விபரமாகும்.

கொலை, தற்கொலை பற்றிய சமுதாய ஆராய்ச்சியாளர் என்ன கருத்துக்களை வெளியிட்டாலும், இப்பகுதி மக்கள் இன்று நிலவும் வாழ்க்கைச் சூழ்நிலையை ஆழமாகச் சிந்திக்கவேண்டியது அவசியமாகின்றது.

காதலில் தோல்வி, தொழில் தேடும் முயற்சிகளில் தோல்வி, வறுமை, குடும்பத் தகராறுகள், இவையே முக்கியகாரணங்களென்றும், தற்கொலைக்குப் பலியானவர்களில் பெரும்பாலோர் 16—25 வயது எல்லைக்குட்பட்ட வாலிபப்பருவத்தினரென்றும் பொலிஸ் அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது.

மனமுறிவே இவ்வித கொடிய முடிவுக்கு அடிப்படைக் காரணமென்பதை எவரும் அறிவர். ஆனால் இவ்விதமனமுறிவு இக்காலத்தில், அதுவும் யாழ். மாவட்டத்தில் அதிகரித்திருப்பது ஊன்றிக்கவனிக்க வேண்டிய காரியமாகும்.

நவநாகரிகம் பழமை பேணும் யாழ்ப்பாணத்தையே விட்டுவைக்கவில்லையென்பதை நாம் உணரத் தொடங்கவேண்டும். வேகம் (Spe:d), வெறி (Craze), நாசம் (Crash) என்பன நவநாகரிகத்தின் சிறப்புப் பண்புகளென்று மேனாட்டாசிரியர் ஒருவர் எழுதியுள்ளார். மக்கள் இந்த 'உயரிய வாழ்க்கைத்தரம்' என்ற குறிக்கோளின் ஆட்சிக்கு வயப்பட்டுள்ளார்கள். இதற்கு அடிமைப்பட்டவர்கள் அவல முடிவெய்துவது அதிசயமல்ல.

மனமுறிவுக்கு கடவுளை மறந்த கல்வியும், வாழ்க்கையுமே முக்கியகாரணமாகும். நம்முன்னோர் இவ்வித தோல்விகளைக் காணவில்லையா? தமது அரு பிரமையப்பதில் பிரச்சினைகளுக்கு முடிவுகாணமுயன்றார்களா?

'உலகத்தில் சமயம் தான் செயலூக்க ஆற்றல்; ஆனால் பயங்களாகிய நீங்களோ, ஒருமனிதனை அவனது சமயத்தின் மூலமாக வயப்படுத்த வேண்டுமேயன்றி உங்களுடைய விபரீத சித்தாந்தங்களைப் புகுத்துவது தவறென

## சமாதான நீதிபதிக்கு பாராட்டு விழா

மாவிட்டபுரம், வியா

சட்டத்தரணி ஆர். ஜெ செல்வரத்தினம், சமாதான நீதிபதியாகவும், உத்தியோகப்பற்றற்ற நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று காலை 8 மணிக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார். இதன் பின் நீதிமன்றத்திலிருந்து ஊர்வலமாக பழம்பிள்ளையார் ஆலய முன்றலுக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. வி. எம். குமாரசாமி தலைமையில், அங்கு நடைபெறும் வரவேற்புக் கூட்டத்தில் யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா, காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. ஜெயபாலசிங்கம், சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் திரு. பி. நாகலிங்கம், சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. கே. வைரமுத்து, மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. பி. பொன்னம்பலம், மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம், தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் திரு. எம். சிதம்பரநாதன், வண. பிதா. குரூஸ், மற்றும் பலர் பேசுவார்கள். (க)

## ஆட்சேபம்

நெல்லியடி, புதன்

இதுவரை காலமும் புலோலி தபால் நிலையத்திலிருந்து பட்டுவாடா செய்யப்பட்டு வந்த தபால் விநியோகம் கடந்த திங்கட்கிழமை முதல் பருத்தித்துறையிலிருந்து விநியோகிக்கப்படுகிறது. ஆனால் தபால்களைச் சேகரித்து அனுப்பும் முறை இக்கந்தோரிலேயே தொடர்ந்து நடைபெறுகிறது.

தபால் திணைக்களம் செய்த இம் மாற்றத்தினை தொடர்ந்து இப்பகுதி மக்களும் பிரமுகர்களும், உடுப்பிட்டி எம். பி. யும் தபால் தந்தி திணைக்கள அதிபதியிடம் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். (அ)

(5-ம் கலத்தொடர்ச்சி)

ஏதாவது செய்தால் என்ன? என்று கேட்டார்.

தலைவடி, மதுரனி, வி. என். பி?

என்னத்தைச் செய்துவிட்டார்கள்?

எழுத்தாளர்களுக்கு இது சமர்ப்பணம்!

—ஊர்சுற்றி.

உணரவேண்டும்' என்று அறிவுறுத்தியுள்ளார் மூதறிஞர் பெர்னுடஷா.

இந்தச் சமய சக்தி என்பது அழுத்தமான தெய்வக் கொள்கையிலிருந்து எழுவது. அது இல்லாவிடில் மற்ற நலன்கள் சேர் கொள்ளா. வேற்று நாடுகளின் சமுதாய உணர்வை எமது சொந்தச்சூழ்நிலை "ஒட்ட" நினைப்பதும், முயல்வதும் மடமையாகும்.

எமது மக்களின் மரபின்படி மனிதன் கடவுளைப்புறக்கணிக்கும்போது, ஒழுக்கத் தகுதிகள் மறைந்துவிடுகின்றன. நன்மையின் இடத்தை வன்மை கவர்ந்துகொள்ளுகின்றது.

யாழ். மாவட்ட சகல சமூகத் தலைவர்களும், நாட்டுப்பற்றுள்ள பெரியோர்களும், இந்தக் கவலை தரும் அவலநிலையை நீக்க, மக்களின் கவனத்தை ஈர்க்கும்வழிவகைகளைத் தாமதமின்றித் தேடவேண்டும்.

# புனிதமாகக் காட்சி தரும் கதிர்காமம்!

— நமது நிருபர் —

கதிர்காம உற்சவத்துக்கு நாலைந்து பக்கத்திலிருந்தும் இப்போது பக்தர்கள் வந்துசேரத் தொடங்கியுள்ளார்கள்.

அடுத்தமாதம் 5ம் திகதி வரை நடக்கவிருக்கும் கதிர்காம உற்சவத்தில் கலந்துகொள்ளும் அடியார்களுக்கு பல வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கிவருகிறது.

கதிர்காம புனித நகர் கட்டட நிர்மாண வேலைகள் துரிதமாக நடந்துகொண்டிருக்கின்றன. பழைய மடங்கள் இருந்த இடங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. கங்கைக்கு இடப்புறமாக அடியார்கள் தங்கிச்செல்ல வசதியான புதிய மடங்கள் காணப்படுகின்றன.

கோவிலும் சுற்றுப்புறங்களும் புனிதமாகக் காட்சி கொடுக்கின்றன.

கங்கையின் கரையோரங்களில் குளிப்பதைக் கைவிடும்படி கூறும் சுகாதாரப் பகுதியினரின் விளம்பரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

செல்லக்கதிர்காமத்துக்கும், புத்தளத்துக்கும் புதிய பாதை காட்டுக்கூடாகப் போடப்பட்டுள்ளது.

### திருட்டுக்கள்

இம்முறை கரையோரப் பாதையில் வேலிவேயபிரை மேவிந்த கதையோலம் பல திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. சந்திரமாவிமலை என்ற இடத்தில் பாதையாத்திரிகர் கோஷ்டிகள் வந்தடைந்ததுடன் இச்சம்பவங்கள் நடைபெற்றனவாம். அரிசி உடு துணி பணம் முதலியவை மாயமாகிவிட்டனவாம். இவை திருட அடியார்கள் வேடத்தில் வந்த திருடர்களின் சேஷ்டை என நம்பப்படுகிறது.

தினமும் காலை மாலைகளில் புழுதி காற்றுடன் வீசப்படாது தண்ணீர் தெளித்து குளிர்மையாக வைக்கப்பட்டிருக்கின்றது. உடன் சுவாமியானைமீது எழுந்தருளும் திருஉலாக்காட்சியை எல்லோரும் நெரிசல் இல்லாமல் வசதியாகப் பார்க்கக்கூடியதாக உயரமான இடங்கள் பழைய மடாலயங்கள் இருந்த இடங்களில் ஆக்கப்பட்டிருக்கின்றன. கார்ப்பேட்டம் சுகாதாரம் மிகவும் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. வெய்யில் சிறிது கொடூரமாக இருந்தபோதிலும் நிழல் மரங்களின் துணையுடன் அடியார்கள் சமாளிக்க முடிகிறது.

### மனோரம்மிய சூழ்நிலை

நல்ல நிழல் மரங்களுடன் மாணிக்ககங்கை மனோரம்மியமான சூழ்நிலையில் மக்களை வரவேற்கிறது. கதிரைமலை உச்சியையும் விசேடமாகக் குறிப்பிட முடியும். இதனை நல்ல உடல் பலம் உள்ளவர்கள்தான் சேர முடியுமேதவிர மற்றவர்கள் கஷ்டப்படவும் நேரிடலாம். செல்லத்திற்கு கால் நடையாகப்போகும் பொழுது ஜோதிஞானந்தரின் யோக ஆச்சிரமம் காணப்படுகிறது.

## ஸ்ரீ சத்ய சாயிபாபா திருவாய்மொழிகள்

— பன்னிருமலை —

தேகம இளைத்தோர் வந்தால்
திண்ணையிற் படுக்கை ஈக;
தாகமோ டுணுகு வோர்க்கு
சலத்தினைக் கொடுக்க; சான்ற
யோகிபோற் கொடுக்க வேண்டாம்
யோசித்துக் கொடுக்க, ஆனால்
நாகமென் றூட வேண்டாம்
நாயெனக் குரைக்கவேண்டாம்.

உடம்பு இளைத்தவருக்குப் படுக்கைவசதிகொடுங்கள். தாகம் உள்ளவருக்குத் தண்ணீர் கொடுங்கள். யோகியைப்போல் கேட்பனவெல்லாவற்றையும் கொடுக்க வேண்டாம். ஆனால், நாகம்போலஆடியோ அல்லது நாய்போலக் குரைத்தோ அவர்களைத் துரத்தவேண்டாம்.

## கதிர்காமம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வை என்பவரின் உதவி அதிகாரி திரு. ஜி. பீ. பெர்னாண்டோ சாட்சியமளித்தார்.

மேல் இடத்தின் கட்டளைப்படி கதிர்காமத்தில் மாலை ஆறு மணிக்கு மேல் தங்கியிருப்பதற்கு லெப்டினண்ட் கெமுனு விஜயரத்னவுக்கு அதிகாரம் இருக்கவில்லை. அவர் தில்லைஸகளுக்கு திரும்பி வந்துவிடவேண்டும் என்று சாட்சி கூறினார்.

வழக்கு தொடர்ந்து நடைபெறுகிறது.

## கோண்டாவில் கொலை வழக்கு

யாழ்ப்பாணம், வியா.

கோண்டாவில் கொலை வழக்கு விசாரணை யாழ், மேல் நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இவ்வழக்கில் கோண்டாவிலைச் சேர்ந்த வெள்ளையன் கப்பையாவைக் கொலைசெய்ததாக பொன்னன் இரத்தினசிங்கம், நாகன் இராசலிங்கம் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (க)

## சைக்கிளில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வரை வைத்தி கந்தையா என்பவர் கண்டு, அவரின் மைத்துனர் சோமசுந்தரத்திற்கு அறிவித்ததாகவும், அவர் ஆஸ்பத்திரியில் [illegible] பட்டபின் மரணமானாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

பிரேத பரிசோதனைக்குட்படுத்திய மரணவிசாரணை அதிகாரி, விசாரணையைப் பின்போட்டார். (உ. அ)

# நாடும் நடப்பும்

'தங்கத்தாத்தா' என்று அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் நினைவாக யாழ். நகரில் அவரின் உருவச் சிலையொன்று நிறுவப்படவிருப்பது தெரிந்ததே.

தங்கத்தாத்தாவுக்குச் சிலை எழுப்புவது வெகு பொருத்தம்.

புலவரின் சிலை அடுத்த மாத நடுப்பகுதி வாக்கில் திறந்து வைக்கப்படத்திட்டமிடப்பட்டிருக்கிறது.

தங்கத்தாத்தாவின் சிலை திறப்புவிழாவையொட்டி பாடசாலை மாணவ மாணவியர் மத்தியில் அகில இலங்கை ரீதியில் பேச்சுப் போட்டியொன்றை ஏற்பாடு செய்ய 'ஈழநாடு' முன்வந்து அதற்கான விண்ணப்பப் படிவத்தையும் வெளியிட்டு வருகிறது.

கல்வி அமைச்சின் சுற்று நிருபம் சம்பந்தமாக இதில் சிறு சிக்கல் ஏற்பட்டுள்ளது. பேச்சுப்போட்டியில் கலந்துகொள்வதற்கு விரும்பும் மாணவன் அல்லது மாணவி பற்றி அந்தக் கல்லூரி அதிபரோ அல்லது பெற்றோரோ அத்தாட்சிப்படுத்தினால் போதும்.

எல்லோரும் இதில் தங்கள் திறமையைக் காண்பிக்கச் சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்பதால் வயதுக் கட்டுப்பாடோ கீழ்ப்பிரிவு மேற்பிரிவு என்ற வேறுபாடோ இல்லாமல் எல்லோருக்கும் பொதுவான போட்டியே நடைபெறவிருக்கிறது.

முதற்பரிசு தங்கப் பதக்கம். இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்குச் சான்றிதழ்கள் மட்டும் வழங்காமல் பரிசுகள் கொடுக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

0 0 0

பண்டத்தரிப்பு பிரதான வீதியிலிருந்து "நலம்விரும்பி" என்ற கையெழுத்துடன் ஒரு கடிதமும் சிறு போத்தலில் மருந்து பனை விசம் தண்ணீரும் பார்சல் தபால்மூலம் நேற்று வந்து சேர்ந்தது.

கடும் இருமல் தடிமனுக்காக தனது பகுதியிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிக்குச் சென்றதாகவும் அங்குள்ள நேரத் தாமதத்தின் பின் "இது" கிடைத்ததாகவும் எழுதியிருக்கிறார்.

போத்தலையும் கடிதத்தையும் அனுப்பிய இந்த அன்பர் ஏன்தான் தனது சொந்தப் பெயரை எழுதத் துணிவில்லாமல் போய்விட்டாரென்பது தான் புரியவில்லை.

0 0 0

"அ. செ. மு." என்றால் இப்போது சிலருக்குத் தெரியாமலிருக்கலாம் ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் அவர். "சுதந்திரன்" "வீரகேசரி", "ஈழநாடு" போன்ற பத்திரிகைகளில் பணியாற்றியவர். தென்னிந்திய சிறுகதைத் தொகுப்புக்களில் அவரின் சிறுகதைகள் வெளிவந்திருக்கின்றன. இலங்கையர்கோன், 'வைத்திலிங்கம், சம்பந்தன் ஆகியோர் அ. செ. மு.வின் சகாக்கள்தவர்.

ஆஸ்த்மா நோயும் வறுமையும் அ. செ. மு.வை ஒரு ஓலைக்குடிசைக்குள் முடக்கி வைத்திருக்கிறது.

அவர் வி. என். பி.யின் மறைவு குறித்து எனக்கு எழுதிய இரத்தினச்சுருக்கமான வார்த்தைகள்...

"தலைவர் வி. என். பி.யின் மறைவு ஆறாத்துயர்."

என்பதுதான்.

இந்தக் குறிப்பைப் பார்த்த எனது நண்பரொருவர் எழுத்தாளன் ஒருவன் செத்த பின்புதான் எழுத்தாளர்கள் கைசேர்த்து ஒப்பாரி வைப்பார்களாக்கும்! இந்த அ. செ. மு.வுக்கு இப்பொழுதே

(8-ம் கலம் பார்க்க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு ஜூலை 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box No. 49, [illegible]
[illegible] Telephone: 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org